விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 24 வியாழன் 08.07.2021 மலர் - 2, இதழ் - 93

# பழங்குடியினருக்கு வன உரிமை

சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சகம் இணைந்து ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவை எடுத்துள்ளன. அதன்படி, ‘பழங்குடியினர், பாரம்பரிய வனவாசிகளுக்கு ஆதரவான வன உரிமைகளை அங்கீகரித்தல் சட்டம், 2006’ ஐ செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா மற்றும் வன, சுற்றுச்சூழல், காலநிலைத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் மற்றும் அந்தந்த அமைச்சகங்களின் செயலாளர்கள் இது குறித்த கூட்டு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

இச்சட்டம் பழங்குடி சமூகங்களின் சட்ட உரிமைகளை அங்கீகரிக்கும். கடந்த 31 டிசம்பர் 2007ல் நடைமுறைக்கு இச்சட்டம் வந்தது என்றாலும், அச்சட்டத்தின் உண்மையான அமலாக்கம் நடைபெறவில்லை. இதற்காக, அகில பாரத வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (ஏ.பி.வி.கே.ஏ) இதற்காக பல்வேறு தொடர் முயற்சிகளை மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி, சம்பந்தப்பட்ட மாநிலங்களில் உள்ள வனத்துறையினர், பாரம்பரியமாக வனப்பகுதிகளில் வாழும் சமூகங்களை காடுகளின் ஆக்கிரமிப்பாளர்களாகப் பார்த்த காலனித்துவ மனநிலையிலிருந்து வெளியே வர வேண்டியது அவசியம்.

அவர்கள் பல நூற்றாண்டுகளாக இந்த காடுகளை பாதுகாத்து வருகின்றனர் என்ற உண்மையை உணர வேண்டும். வனத்தில் வாழும் பழங்குடியின மக்களின் சமூக நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது. அவர்கள் தங்கள் வன வளங்களை, திட்டமிட்ட வகையில், சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவ வேண்டும்.

விஜயபாரதம்



# லவ் ஜிஹாத் காவல்துறை ஒப்புதல்



விஜயபாரதம்

கேரளாவில் பணி ஓய்வு பெற்று வெளியேறும் கேரள காவல்துறைத் தலைவர் லோக்நாத் பெஹ்ராவால், ஒரு உள்ளூர் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், 'முஸ்லிம் அடிப்படைவாதிகளின் எழுச்சி, பயங்கரவாத ஆதரவு கடந்த சில ஆண்டுகளாக கேரளாவில் வளர்ந்து வருகிறது. முஸ்லீம் அல்லாத பெண்கள், சிறுமிகளை முஸ்லிம் மதத்திற்கு மாற்றுவதற்காக லவ் ஜிஹாத் நடைபெறுகிறது. அதற்கான அனைத்து ஆதரவுகளையும் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் வழங்கி வருகின்றன. அந்த பெண்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றனர். படித்தவர்களே அதிகம் இலக்காகிறார்கள். பல வெளிநாட்டு பயங்கரவாதிகள் தங்கள் அமைப்புக்கு கேரள மக்களை தேர்ந்தெடுக்கின்றனர். மாநிலத்தில் ஸ்லீப்பர் செல்கள் இருப்பதை மறுப்பதற்கில்லை. கேரளாவில் தற்போதைய நிலைமை மிகவும் ஆபத்தானது' என தெரிவித்தார்.

---



# டெலிமார்க்கெட்டிங் தொல்லைக்கு முடிவு

விஜயபாரதம்

நமது அலைபேசியில் அன்றாடம் நாம் சந்திக்கும் தொல்லைகளில் ஒன்று நேரம் காலமில்லாத டெலிமார்க்கெட்டிங் அழைப்புகள். இதற்கு கடிவாளம் போடும் ஒரு நல்ல முயற்சியில் இறங்கியுள்ளது தொலைதொடர்புத் துறை. அதன்படி, டெலிமார்க்கெட்டிங்க் நிறுவனங்களின் ஒவ்வொரு அழைப்புக்கும், ஒவ்வொரு குறுஞ்செய்திக்கும் அபராதம் விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, முதல் 10 தடவை விதிமீறல்களுக்கு ரூ. 1,000 அபராதமும், 10 முதல் 50 விதிமீறல்களுக்கு ரூ. 5 ஆயிரம், 50க்கும் மேற்பட்ட விதிமீறல்களுக்கு, தலா ரூ. 10 ஆயிரம் அபராதம் விதிப்பது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், தானியங்கி முறையில் இந்த அழைப்பாளர்களின் சாதனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்படும். அதில் சந்தேகம் இருந்தால், மறு சரிபார்ப்புக்கு உட்படுத்தப்படும். விதிமுறை மீறல்கள் தொடர்ந்தால், அவர்களுக்கு அனைத்து தொலைதொடர்பு இணைப்புகள் வழங்க இரண்டு வருட தடை விதிக்கப்படும்.


விஜயபாரதம்

# புதிய அமைச்சரவை

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை நேற்று விரிவாக்கம் செய்யப்பட்டது. அதில், தமிழக பா.ஜ.க தலைவர் எல்.முருகன், ஜோதிராதித்யா சிந்தியா, சர்பானந்தா சோனாவால், கிரண் ரிஜ்ஜூ, நாராயன் ரானே உள்ளிட்ட 43 பேர் அமைச்சர்களாக பதிவியேற்றுக் கொண்டனர். மேலும், கூட்டுறவுத் துறைக்கென, 'சஹ்கர் சே சமிர்தி' (ஒத்துழைப்பிலிருந்து செழிப்பு) என்ற கொள்கை பார்வையுடன் தனி அமைச்சகத்தை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

# கிறிஸ்தவ கல்லூரி பேராசிரியர் கைது

திருச்சி புத்தூரில் உள்ள பிஷப் ஹீபர் கல்லூரியில் தமிழ்த் துறை தலைவராக பணியாற்றி வரும் பால் சந்திரமோகன், வகுப்பில் ஆபாசமாக நடப்பது, பாலியல் சீண்டல்களில் ஈடுபடுவது, மாணவியரை தன் அறைக்கு வரச் சொல்லி ஆபாசமாக பேசுவது என ஒழுக்கக்கேடாக நடந்துள்ளார். இது குறித்து, முதலாம் ஆண்டு எம்.ஏ படிக்கும் ஐந்து மாணவியர், கடந்த மார்ச் மாதம் கல்லூரி முதல்வரிடம் புகார் அளித்தனர். இதனையடுத்து பால் சந்திரமோகன், பணி நீக்கம் செய்யப்பட்டார். மாணவியரின் புகார் குறித்து, ஸ்ரீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அதன்படி, பேராசிரியர் பால் சந்திரமோகனை காவல்துறையினர் நேற்று கைது செய்தனர்.


விஜயபாரதம்


விஜயபாரதம்

# மமதா பானர்ஜிக்கு அபராதம்

நந்திகிராமில் பா.ஜ.க தலைவர் சுவேந்து அதிகாரியின் தேர்தல் வெற்றிக்கு எதிராக வழக்குத் தொடுத்தார் மமதா பானர்ஜி. அந்த வழக்கை விசாரித்த நீதிபதி கௌஷிக் சந்தா, பா.ஜ.க தொடர்புடையவர், எனவே, அவரை நீக்க வேண்டும் என மனு தாக்கல் செய்தார் மமதா. தேவையில்லாமல், நீதித்துறையின் மீது களங்கம் கற்பித்ததற்காக, அவருக்கு ரூ. 5 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. இந்த சர்ச்சை காரணமாக நீதிபதி இனி அவ்வழக்கை தான் விசாரிக்கப்போவது இல்லை என அதிலிருந்து விலகினார். முன்னதாக கடந்த வாரம், நாரதா லஞ்சம் வழக்கில் தாமதமாக பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ததற்காக கல்கத்தா உயர் நீதிமன்றம் மமதாவுக்கு ரூ. 5000 அபராதம் விதித்தது என்பதும் மமதா மீதான பல்வேறு வழக்குகளில் உச்ச நீதிமன்ற நீதிபதி அனிருத்த போஸ், நீதிபதி இந்திரா பானர்ஜி உள்ளிட்ட பல நீதிபதிகள் அதனை விசாரிக்காமல் விலகிவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வைப்புத்தொகை ரிசர்வ் வங்கி அறிவிப்பு


விஜயபாரதம்

வங்கிகளில் நாம் வைக்கும் நிரந்தர வைப்புத் தொகைக்கான அவகாசம் முடியும் நிலையில் முன்பெல்லாம் அதனை வங்கிகள் தானாகவே புதுப்பித்துக் கொள்ளும். தற்போது இந்த நடைமுறையை மாற்றி ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. அதன்படி, நிரந்தர வைப்புத் தொகை கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்கள் அதன் அவகாசம் முடியும் தருவாயில் வங்கிகளுக்கு சென்று அதனை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அப்படி புதுப்பிக்கத் தவறினால்,அந்த வைப்புத் தொகைக்கான வட்டி, சேமிப்பு கணக்குக்கான வட்டியாக குறைக்கப்படும் என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

# நடிகர்களை கூத்தாடி என்று அழைக்கலாமா?

ஒளிப்பதிவு சட்டத்திருத்த மசோதா தொடர்பாக முதலமைச்சர் ஸ்டாலினை நடிகர் கார்த்தி நேரில் சென்று சந்தித்து பேசினார். பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசை, ஒன்றிய அரசு எனக் குறிப்பிட்டு பேசினார். அவரது இந்தப் பேச்சிற்கு பா.ஜ.கவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அவ்வகையில், நடிகையும், பா.ஜ.க நிர்வாகியுமான காயத்ரி ரகுராம், தனது டுவிட்டர் கணக்கில், நடிகர் கார்த்திக்கு சில கேள்வியை முன்வைத்துள்ளார். அதில், “நடிகர்கள் என்று அழைப்பதற்கு பதிலாக மக்கள் அவர்களை கூத்தாடி என்று அழைத்தால் அவர்கள் ஏன் கோபப்படுகிறார்கள்? இரண்டு சொற்களுக்கும் பொருள் ஒன்றுதான். நடிகர் சங்கத்திற்கு பதிலாக, இதை நாம் கூத்தாடி சங்கம் என்று அழைக்கலாமா? அவரைப் போன்ற நன்கு படித்த மனிதனுக்கு புரிதல் மிகக் குறைவு shame,” எனக் குறிப்பிட்டுள்ளார்.

விஜயபாரதம்





# கோயில் நிலம் மீட்பு


விஜயபாரதம்

கோயம்புத்தூர் காந்தி பார்க், சுக்ரவார்பேட்டை சாலையில் பால தண்டாயுதபாணி சுவாமி கோயில் உள்ளது. இந்த கோயிலுக்கு சொந்தமான இடத்தில் 909 சதுர அடி பரப்பளவை ஆக்கிரமித்து உணவகம் ஒன்று கட்டப்பட்டு செயல்பட்டு வந்துள்ளது. கோயில் நிலங்களை அரசு மீட்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், இக்கோயில் நிலத்தில் ஆக்கிரமிப்பு உறுதியானது. அதனால், இடத்தை உடனடியாக காலி செய்ய ஹிந்து அறநிலையத் துறையினர் உணவகத்தை அறிவுறுத்தி 30 நாள் கால அவகாசம் கொடுத்தனர். எனினும் அவர்கள் அந்த இடத்தை காலி செய்யாததால், உணவகக் கட்டிடத்தை ஹிந்து சமய அறநிலையத்துறையினர் காவல்துறை உதவியோடு ஜேசிபி இயந்திரத்தின் மூலம் இடித்து அப்புறப்படுத்தினர்.

## ஹிந்து முன்னணி புகார்

ஹிந்து முன்னணி வேலூர் கோட்டப் பொறுப்பாளர் மகேஷ், வேலூர் எஸ். பி.,யிடம் புகார் மனு ஒன்றை அளித்துள்ளார். அதில், 'ஹிந்து கடவுள்களை ஆபாசமாக சித்தரிக்கும் காட்சிகள், வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டில் ஒரு வாட்ஸ் ஆப் குழுவில் பரவி வருகிறது. அதில், பெண்களையும், தேசிய கொடியையும்கூட அவமதித்துள்ளனர். அந்த வாட்ஸ் ஆப் குழுவின் அட்மின், பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர். அக்குழுவில் 236 பேருக்கும் அதிகமானோர் இணைந்துள்ளனர். அந்த அட்மின் அலைபேசி எண்களை பார்த்தால், வெளிநாட்டை சேர்ந்தது போல் உள்ளது. இதனால், பேர்ணாம்பட்டில் பாகிஸ்தான் நாட்டிற்கு தொடர்புடைய குழு இயங்குவதாக சந்தேகம் எழுகிறது. இவர்கள், தேச விரோத செயல்களில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. எனவே, அவர்களை கைது செய்து விசாரிக்க வேண்டும்' என்று கோரியுள்ளார். மனு மீது விசாரணை செய்யவும், சம்பந்தப்பட்ட வாட்ஸ்ஆப்பை கண்காணிக்கவும் எஸ்.பி செல்வகுமார் உத்தரவிட்டுள்ளார்.

விஜயபாரதம்

## வணிக வரி புகார்

வணிகவரி துறையை சார்ந்த அலுவலர்களின் சேவை குறைபாடு தொடர்பாக பொதுமக்கள் மற்றும் வணிகர்களிடமிருந்து பெறப்படும் புகார்களை பரிசீலனை செய்யும் பொருட்டு கடந்த 1ந்தேதி முதல் சென்னை சேப்பாக்கம், எழிலகத்தில் உள்ள வணிக வரி கமிஷனர் அலுவலகத்தில் புகார் பிரிவு செயல்படுகிறது. பொது மக்கள் மற்றும் வணிகர்கள், திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை, 04428514250 என்ற தொலைபேசி எண் மற்றும் ctdpetition@ctd.tn.gov.in என்ற பிரத்யேக மின்னஞ்சல் முகவரியில் தங்களது புகார்களை தெரிவிக்கலாம் என வணிகவரித் துறை தெரிவித்துள்ளது.

விஜயபாரதம்



## நீலப் பொருளாதார ஒத்துழைப்பு

2021 ஆம் ஆண்டுக்கான இந்தியப் பெருங்கடல் குறித்த ஆட் ஹாவ்க் கமிட்டியில் பேசிய ஐ.நா சபைக்கான பாரதத்தின் நிரந்தரத் திட்ட ஆலோசகர் ஏ. அமர்நாத், 'நாங்கள், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில், ஒத்துழைப்பு, ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் ஒட்டுமொத்த வளர்ச்சியை விரும்புகிறோம். இதனால் நீலப் பொருளாதாரம் எனப்படும் கடல் சார்ந்த பொருளாதாரம் உலக அளவில் விரிவடையும். கொரோனாவுக்கு பிந்தைய உலகம், அத்தகைய ஒத்துழைப்பை விரைவுபடுத்துவதற்கு அவசியமாகிறது. இன்று, இந்தியப் பெருங்கடல் உலகின் கொள்கலன் ஏற்றுமதிகளில் பாதிக்கும் மேலாக கையாள்கிறது, மொத்த சரக்கு போக்குவரத்தில் மூன்றில் ஒரு பங்கு, எண்ணெய் ஏற்றுமதியில் மூன்றில் இரண்டு பங்கை கையாள்கிறது. எனவே, இந்தியப் பெருங்கடல் அமைதி மண்டலமாக இருப்பதை அனைவரும் உறுதிசெய்வது அவசியம்' என தெரிவித்தார்.



விஜயபாரதம்

# விளையாட்டு காட்டும் டுவிட்டர்




விஜயபாரதம்

மத்திய அரசின் புதிய விதிமுறையின் படி, பயனாளர்கள் அளிக்கும் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க, பாரதத்தை சேர்ந்த ஒருவரை குறை தீர்ப்பு அதிகாரியை நியமிக்காமல், 'டுவிட்டர்' காலம் தாழ்த்தி வந்தது. அரசு எச்சரித்த பின், வேண்டுமென்றே ஜெரமி கெசல் என்ற அமெரிக்கரை அந்நிறுவனம் நியமித்தது. இந்நிலையில், மத்திய அரசின் விதிமுறைகளை டுவிட்டர் நிறுவனம் மீறியதாக, அமித் ஆச்சார்யா என்பவர், டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இதனை விசாரித்த நீதிமன்றம், புதிய குறை தீர்ப்பு அதிகாரியை நியமிக்க, இஷ்டத்துக்கு கால அவகாசம் எடுத்துக் கொள்வதை அனுமதிக்க முடியாது, புதிய அதிகாரி நியமனம் எப்போது என்பது குறித்து இன்றைய தினம் நீதிமன்றத்தில் தெளிவான பதிலை அளிக்க வேண்டும்' என உத்தரவிட்டுள்ளது.

**உ.பியில் டுவிட்டரின் வில்லங்கம்:**

உத்தர பிரதேசத்தின் காசியாபாத்தில் அப்துல் சமத் என்ற முதியவரை, போலி தாயத்து பிரச்சனை காரணமாக சில முஸ்லிம்கள் தாக்கினர். ஆனால், கலவரம் ஏற்படுத்தும் நோக்கில், அவர்கள் 'ஜெய் ஸ்ரீராம், வந்தே மாதரம்' என, கோஷமிட வற்புறுத்துவதாக அது திரிக்கப்பட்டு சமூகவலைதளத்தில் வெளியிடப்பட்டது. இந்த, வீடியோவை நீக்க டுவிட்டரை, உ.பி காவல்துறையினர் அறிவுறுத்தினர். டுவிட்டர் அதனை நீக்க மறுத்தது. பின்னர் நடவடிக்கைக்கு பயந்து நீக்கியது. இது குறித்து, டுவிட்டர் மீது உ.பி காவல்துறை வழக்கு பதிவு செய்தது.

**கைது செய்யக்கூடாது:**

டுவிட்டர் இந்தியா தலைவர் மணிஷ் மகேஸ்வரி நேரில் ஆஜராக நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இது குறித்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மணிஷ் மகேஸ்வரி தரப்பு, 'என்னை கைது செய்ய மாட்டோம் என, உ.பி காவல்துறையினர் உறுதி அளித்தால், 24 மணி நேரத்திற்குள், உ.பியில் விசாரணைக்கு ஆஜராக தயார்' என தெரிவிக்கப்பட்டது. அவரை கைது செய்வதற்காக அவருக்கு நோட்டீஸ் அனுப்பவில்லை. என உ.பி காவல்துறை பதில் அளித்துள்ளது.

**மத்திய அரசு மனு:**

டுவிட்டர், வாட்ஸப், முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்கள், அமேசான், நெட்பிளிக்ஸ் உள்ளிட்ட ஓ.டி.டி இணைய ஒளிபரப்பு நிறுவனங்கள் உள்ளிட்டவற்றை கட்டுப்படுத்தும் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளை மத்திய அரசு சமீபத்தில் அமல்படுத்தியது. இந்த புதிய விதிகளை எதிர்த்து நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான அனைத்து வழக்குகளையும் உச்ச நீதிமன்ற விசாரணைக்கு மாற்றி உத்தரவிடுமாறு உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

# லட்சத்தீவு அனுமதி மறுப்பு



விஜயபாரதம்

லட்சத்தீவிற்கு பயணம் செல்ல காங்கிரஸ் எம்.பிக்கள், கம்யூனிஸ்ட் எம்.பிக்கள் மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருந்தனர். ஆனால், லட்சத்தீவு ஆட்சியர் அஸ்கர்அலி வெளியிட்ட அறிக்கையில்,''லட்சத் தீவு மக்களின் பிரச்சனைகளை புரிந்து கொள்ளபயணம் மேற்கொள்ள விரும்புவதாக எம்.பி.க்கள் கூறியுள்ளனர். ஆனால் அவர்களின் பயணம்அரசியல் உள்நோக்கம் கொண்டதாக தெரிகிறது. அவர்களால் சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று தெரிகிறது. எனவே அவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது'' என்று தெரிவித்துள்ளார்.


# கார் திருட்டு பயங்கரவாத தொடர்பு



விஜயபாரதம்

டெல்லியில் 100 க்கும் மேற்பட்ட கார்களைத் திருடி விற்ற ஷெலகத் அகமது, முகமது ஜுபார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஒரு மாதத்தில் சோபூரிலிருந்து டெல்லிக்கு 6 முறை விமானத்தில் வந்து காரைத் திருடி காஷ்மீருக்கு ஓட்டி சென்று அங்கு விற்றுள்ளனர். அவர்களின் செல்போன்களை ஆராய்ந்ததில் ஆயுதங்கள், டிரோன்கள், பயங்கரவாதிகள் புகைப்படங்கள், பயங்கரவாத தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் படங்கள் இருப்பது தெரிந்தது. மேலும், அகமதுவின் உடலின் பல பாகங்களில் தீக்காயங்கள் இருந்தன. அது வெடிபொருட்களால் ஏற்பட்ட காயமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. எனவே, காஷ்மீரின் பாகர்கஞ்ச் பகுதியைச் சேர்ந்த இந்த இருவருக்கும் காஷ்மீர் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து தில்லி காவல்துறை தீவிர விசாரணை நடத்தி வருகிறது.


# விதவிதமான கொரோனா



விஜயபாரதம்

உலக சுகாதார நிறுவனம் தனது 'வேரியண்ட் ஆப் இன்ட்ரஸ்ட்' பட்டியலில் புதிதாக உருமாற்றம் பெற்றுள்ள கொரோனா வைரஸ் திரிபு ஒன்றை சேர்த்துள்ளது. இதற்கு லாம்டா' என்று பெயரிடப்பட்டுள்ளது. பெருவில் கண்டறியப்பட்ட லாம்டா வகை தற்போது உலக அளவில் 30 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவியுள்ளதாக கூறப்படுகிறது. இவ்வகை திரிபு, டெல்டாவை காட்டிலும் ஆபத்தானது என்றும் கொடிய தன்மை கொண்டது என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில் லாம்டா திரிபு பாரதத்தில் கண்டறியப்பட வில்லை என மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

## கம்யூனிஸ்ட் கட்சியின் காமுகன்



விஜயபாரதம்

கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞரணித் தலைவராக உள்ளவர் அர்ஜூன். அவர், அப்பகுதி தேயிலை தோட்ட கூலித் தொழிலாளர்களான கண்ணன், பிரேமா தம்பதியரின் 6 வயது சிறுமியை 3 வருடங்களாக பாலியல் கொடுமை செய்து கொலை செய்துள்ளார். இதனை மறைக்க ஊஞ்சலில் ஆடியபோது கழுத்து இறுகி இறந்ததாக காட்டி நடகமாடியுள்ளார். சிறுமியின் இறப்பில் மர்மம் இருப்பதாக பெற்றோர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். காவல்துறையினர் விசாரனையில், அர்ஜுன் செய்த பாதகச் செயல் வெளியானது. இதனையடுத்து அவர், கைது செய்யப்பட்டார்.

## ஆப்கனுக்கு அதிர்ச்சி அளித்த அமெரிக்கா



விஜயபாரதம்


ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க ராணுவத்தின் மிகப்பெரிய விமான தளமான பக்ராமில் இருந்து கடந்த ஞாயிறு அன்று இரவோடு இரவாக ஆப்கன் ராணுவத்துக்குக் கூட முறைப்படி தெரிவிக்காமல், அமெரிக்க ராணுவம் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு வெளியேறியது என்பது தெரியவந்துள்ளது. அமெரிக்கா அங்கிருந்து வெளியேறியதை காலை 7:00 மணிக்குதான் ஆப்கன் ராணுவம் அறிந்து கொண்டது. ஆப்கன் ராணுவ பயன்பாட்டிற்காக, அங்கு ஒரு சில சிறிய ரக ஆயுதங்கள், உணவு பொருட்கள் என சிலவற்றை மட்டுமே அமெரிக்க ராணுவம் விட்டுச் சென்றது. அவர்கள் வெளியேறிய பின்னர், ஆப்கானிய ராணுவம் விமான தளத்தை கட்டுப்பாட்டில் எடுக்காததால் கொள்ளையர்கள் அந்த வளாகத்தை கொள்ளையடித்தனர். சர்வதேச அளவில், அமெரிக்காவின் இந்த செயல்பாடு தற்போது கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.


**விஜயபாரதம் தேசிய வார இதழ்**

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

9313 99006

# போகலாமா சார்தாம் யாத்திரை?




விஜயபாரதம்

தேசம் முழுவதும் கொரோனா தாக்கம் குறைந்து வருகிறது. பல தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், பத்ரிநாத், ஜெகந்நாத் பூரி, ராமேஸ்வரம், துவாரகாதிஷ் உள்ளிட்ட புனித சுற்றுலாத் தலங்களை மக்கள் சென்று தரிசிக்க ஏதுவாக, சார்தாம் யாத்திரையை நடத்த இந்திய ரயில்வே முடிவு செய்துள்ளது.

ராமாயண தலங்களை தரிசிக்கும் "ஸ்ரீ ராமாயண யாத்திரை" மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றது. அதனைத் தொடர்ந்து தற்போது, ஐ.ஆர்.சி.டி.சி இந்த யாத்திரையை, 'தேகோ அப்னா தேஷ்' என்ற டீலக்ஸ் ஏசி சுற்றுலா ரயில் மூலம் நடத்தவிருக்கிறது. இந்த 16 நாள் சுற்றுலா, செப்டம்பர் 18, 2021 அன்று டெல்லி சஃப்தர்ஜங் ரயில் நிலையத்திலிருந்து தொடங்கி, சுமார் 8,500 கிலோமீட்டர் பயணிக்கும்.

அதில், பத்ரிநாத், மனா கிராமம் (சீன எல்லைக்கு அருகில்), நரசிங்கா கோயில் (ஜோஷிமட்), ரிஷிகேஷ், ஜகந்நாத் பூரி, பூரியின் கோல்டன் பீச், கொனார்க் சூரியக் கோயில், சந்திரபாகா கடற்கரை, தனுஷ்கோடி, ராமேஸ்வரம், நாகேஸ்வர் ஜோதிர்லிங்கா உள்ளிட்ட துவாரகாதிஷ், சிவராஜ்பூர் கடற்கரை, பேட் துவாரகா என பல இடங்களும் சுற்றி கண்பிக்கப்படும்.

இந்த டீலக்ஸ் ஏசி டூரிஸ்ட் ரயிலில் இரண்டு உணவு விடுதிகள், நவீன சமையலறை, ஷவர் க்யூபிகல்ஸ், முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு ஏ.சி, கால் மசாஜர், சிசிடிவி கேமராக்கள், பாதுகாப்பு காவலர்கள் என பல மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் உள்ளன.

156 பேர் பயணிக்கும் திறன் கொண்ட பெட்டிகளில் சுமார் 120 பயணிகளுக்கு மட்டுமே முன்பதிவு, முகக்கவசங்கள், கை கையுறைகள், சானிட்டைசர் பயணிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என கொரோனா பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பின்பற்றப்படும். பயணத் தொகையாக ஒருவருக்கு 78,585 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

# நெப்போலியனின் நகைச்சுவை



விஜயபாரதம்

பயமென்றால் என்னவென்றே அறியாமல் தன்னை வார்த்தெடுத்துக் கொண்ட நெப்போலியன் உருவத்தில் பார்க்க குள்ளமானவர். ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் மட்டும் உறங்கிய நெப்போலியன் ஆழ்ந்து வாசிக்கிற பழக்கம் உள்ளவர். வாசிப்பே நம்மை பக்குவப்படுத்தும் என்பது அவரது எண்ணம். போர்களில் தொடந்து வென்று கொண்டிருந்த வீரன் நெப்போலியன். ஆனால், ஓரிரு செட் ஆடைகள், இரண்டு வேளை மட்டுமே எளிமையான உணவு, அரைக் குவளை காபி மட்டும் இரண்டு அல்லது மூன்று வேளை என அவரது சொந்த வாழ்க்கை மிகவும் சிக்கனமானது. சுறுசுறுப்பாக இருக்கும் அவரின் சின்னம் தேனீ.

நெப்போலியன் போரில் தோற்ற சமயம் அது, அப்பொழுது நடந்த ஒரு சம்பவம். ரஷ்ய படைகளின் கண்ணில் இருந்து தப்புவதற்காக, ஒரு தையல்காரனிடம் சரண் புகுந்தார் நெப்போலியன். "என்னை காட்டிகொடுக்காவிட்டால் மூன்று வரங்கள் தருகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஒரு பெரிய துணிமூட்டைக்குள் ஒளிந்துகொண்டார். ரஷ்ய படைகள் நெப்போலியனைத் தேடி வந்தன. துணி மூட்டைக்குள் கத்திகளை சொருகி பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் ஆகாமல் நெப்போலியன் தப்பிவிட்டார். அதற்கு பின் நெப்போலியனை காக்க பிரெஞ்சு படைகள் வந்தன. சொன்னபடியே, வரங்களை கேட்க சொன்னார் நெப்போலியன்.

"முதலில் கடையின் ஓடுகளை சரி செய்ய வேண்டும்". "சரி, முடிந்தது" என்றார் நெப்போலியன். "அடுத்து" என கேட்க, "எதிர்க்கடை தையல்காரனை நாடு கடத்தி விடுங்கள், ஒரே தொழில் போட்டி" என்றான் கடைக்காரன். சிரித்துக்கொண்டே, "சரி! அடுத்து?" என்றார். "நீங்கள் அந்த துணிமூட்டைக்குள் இருக்கும்பொழுது கத்தியால் குத்தியபோது எப்படி உணர்ந்தீர்கள்" என்றான் தையல் கடைக்காரன்.

"ஹ்ம்ம்" என்ற நெப்போலியன், "கிளம்புங்கள்!" என படைகளிடம் சொல்லிவிட்டு, வெளியேறும் பொழுது சடக்கென்று திரும்பி, ஒரு படை வீரனை பார்த்து தையல்காரனின் தலையில் துப்பாக்கியை வைக்கச்சொல்லி, ஒன்று இரண்டு மூன்று என்றதும் இவனை சுட்டுவிடு என்றார். துப்பாக்கி, தையல்காரன் தலையில் வைக்கப்பட்டது. "ஒன்று... இரண்டு.... மூன்று!" என்றதும் அதீத மௌனம், குண்டு வெடிக்கவில்லை. வியர்த்துப்போன தையல்காரனை பார்த்து "இப்படிதான் இருந்தது எனக்கு!" என்று சொல்லிவிட்டுவிட்டு கிளம்பினார் நெப்போலியன். அந்த அளவுக்கு நகைச்சுவை உணர்வும் நெப்போலியனிடம் இருந்தது.

மைதிலி சீனு